பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

30 03 2025 **SUNDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

**தலைப்புச் செய்திகள்**

1. பிரதமர் திரு நரேந்திர மோடி, மகாராஷ்ட்ரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

2. யுகாதி, குடிபடவா, புத்தாண்டு தினத்தையொட்டி குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. அரசின் நலத்திட்டங்கள் கடைக்கோடி மக்களையும் சென்றடைவதை உறுதி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. எகிப்து மற்றும் கத்தார் நாடுகள் தெரிவித்துள்ள புதிய போர் நிறுத்த ஆலோசனையை ஏற்றுக்கொள்வதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 36 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

**<<<<<<>>>>>>**

பிரதமர் திரு நரேந்திர மோடி, மகாராஷ்ட்ரா மற்றும் சத்தீஸ்கர் மாநிலங்களில் இன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறார்.

இதனை சமூக வலைதளத்தில பதிவிட்டுள்ள பிரதமர், மகாராஷ்ட்ரா மாநிலம் நாக்பூரில் உள்ள ஸ்மிருதி மந்திர் வளாகத்தில் ஆர் எஸ் எஸ் நிறுவன தலைவர்களான **'Keshav Hedgewar, Golwalkar,** ஆகியோரது நினைவிடங்களில் மரியாதை செலுத்த இருப்பதாக கூறியுள்ளார்.

மேலும், அண்ணல் அம்பேத்கர் புத்த மதத்தை தழுவிய இடமான தீட்சபூமிக்கும் செல்ல இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதனைத்தொடர்ந்து, நாக்பூரில் மாதவ் நேத்ராலயா கண் மருத்துவமனைக்கு அடிக்கல் நாட்டுவதுடன், சூரியசக்தி பாதுகாப்பு மற்றும் வான் ஆராய்ச்சி நிலையத்தின் வெடிமருந்து தொழிற்சாலையையும் பார்வையிட இருப்பதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாக்பூர் நிகழ்ச்சிகளை முடித்துக்கொண்டு சத்தீஸ்கரில் 33 ஆயிரத்து 700 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கிவைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்ட இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

எரிசக்தி, எண்ணெய் மற்றும் எரிவாயு, வீட்டுவசதி, ரயில் மற்றும் சாலை போக்குவரத்து திட்டங்களை தொடங்கிவைக்க இருப்பதாகவும் திரு நரேந்திர மோடி தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

தெலுங்கு, கன்னடம், மராத்தி உள்ளிட்ட மொழிகளை பேசும் மக்களின் புத்தாண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது

யுகாதி, குடிபடவா, சைத்ர சுக்லாதி போன்ற பெயர்களில் கொண்டாடப்படும் இந்த புத்தாண்டு தினத்தையொட்டி தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், வசந்த காலத்தின் தொடக்கத்தை குறிக்கும் இந்த புத்தாண்டு தினம், இந்தியாவின் கலாச்சார பன்முகத்தன்மையை வெளிப்படுத்துவதோடு, சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாக உள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நாளில், புதிதாக அறுவடை செய்யப்பட்ட பயிர்களை படைத்து, இயற்கைக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், மக்கள் இந்த புத்தாண்டை கொண்டாடுவதாகவும் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் விடுத்துள்ள யுகாதி வாழ்த்து செய்தியில், திமுக ஆட்சிகாலத்தில்தான் யுகாதிக்கு அரசு விடுமுறை விடப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

மொழி, அரசியல், உரிமைகளை காப்பதற்கான ஊக்கத்தை வழங்குவதாக யுகாதி திருநாள் அமையட்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், தமிழ் மக்களோடு ஒன்றிணைந்து வாழ்ந்துவரும் தெலுங்கு மற்றும் கன்னடம் மொழி பேசும் மக்கள் இந்த புத்தாண்டில் மேற்கொள்ளும் புதிய முயற்சிகள் வெற்றிபெற வாழ்த்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

பிரதமரின் திறன் மேம்பாட்டுப்பயிற்சித் திட்டத்தை மத்திய சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு தொடங்கிவைத்தார்.

தில்லி சீக்கிய குருத்வாரா நிர்வாகக்குழு சார்பில் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தின்மூலம், ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு கல்விக்கான உதவி மற்றும் திறன்மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட உள்ளது.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய திரு கிரண் ரிஜிஜு, 31 ஆயிரத்து 600 இளைஞர்கள் இந்த பயிற்சியில் பங்கேற்க இருப்பதாக தெரிவித்தார்.

செயற்கை நுண்ணறிவு, தொழில்நுட்பம் தரவு அறிவியல், 5-ஜி தொலைத்தொடர்பு சேவை, கிராபிக்ஸ் மற்றும் சூரியசக்தி மின்தகடு பொருத்துதல் உள்ளிட்ட துறைகளில் பயிற்சி அளிக்கப்பட இருப்பதாகவும் அவர் கூறினார்.

100 கோடி ரூபாய்செலவில் மேற்கொள்ளப்படும் இந்த பயிற்சித் திட்டம், சீக்கிய சமுதாயத்தை சேர்ந்த இளைஞர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களது திறனை மேம்படுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு கிரண் ரிஜிஜு தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் மக்களுக்கான சேவைகள் வழங்குவதை உறுதி செய்துள்ளதாக பிரதமர் அலுவலக இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள இந்திய பொது நிர்வாகக்கழகத்தின் ஆண்டு விழாவில் பங்கேற்று பேசிய அவர், அரசின் திட்டங்கள் கடைக்கோடியில் உள்ள மக்களையும் சென்றடைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக தெரிவித்தார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான, அரசு நிர்வாகத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய பணியாளர் நலத்துறை மக்கள்நலன் சார்ந்த பல்வேறு சீர்திருத்தங்களை மேற்கொண்டிருப்பதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலியில் இன்று காலை 11 மணிக்கு ஒலிபரப்பாகிறது.

நாட்டில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

பிரதமர் உரை முடிந்தவுடன் அதன் தமிழாக்கத்தை சென்னை அகில இந்தியா வானொலி ஒலிபரப்பு செய்கிறது.

இது இரவு எட்டு மணிக்கு மறு ஒலிபரப்பும் செய்யப்பட உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>

பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி மீண்டும் ஆட்சி அமைக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இரண்டு நாள் பயணமாக பாட்னா சென்றுள்ள அவர், அங்குள்ள மாநில பிஜேபி தலைமை அலுவலகத்தில், பிஜேபி-யை சேர்ந்த மத்திய – மாநில அமைச்சர்கள், நாடாளுமன்ற – சட்டமன்ற உறுப்பினர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அப்போது பேசிய அவர், பீகார் சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி 225 தொகுதிகளில் வெற்றிபெறும் வகையில், களப்பணியாற்ற வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

<<<<<<>>>>>>

இந்தியா – அமெரிக்கா இடையிலான வர்த்தக உடன்படிக்கை இந்த ஆண்டின் பிற்பகுதியில் இறுதி செய்யப்படும் என மத்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, புதுதில்லியில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் நேற்று முடிவடைந்ததாகவும், இதனை இருதரப்புக்கும் பயன் அளிக்கக்கூடிய வர்த்தக உடன்படிக்கையாக முன்னெடுத்துச் செல்வதற்கான அடுத்தக்கட்டப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்று அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மியான்மருக்கு இந்திய விமானப்படையின் ஐந்து விமானங்கள் மூலம், நிவாரணப்பொருட்கள் மற்றும் மீட்புப்பணியாளர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, வெளியுறவுத்துறை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், யாங்கூன் மற்றும் **Nay pyi Taw** ’ நகரங்களுக்கு சென்று சேர்ந்த இந்த விமானங்களில் தேசிய பேரிடர் மீட்புப்படையினருடன் 60 ஆம்புலன்ஸுகள் மற்றும் நிவாரணப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்திற்கு பிறகு யாங்கூன் விமான நிலையம் இன்னும் முழுமையான செயல்பாட்டுக்கு வராத நிலையிலும், இந்திய விமானப்படை விமானங்கள் நிவாரண பொருட்களை ஏற்றிச்சென்றிருப்பதாக அதில் கூறப்பட்டுள்ளது.

தேசிய பேரிடர் மீட்புப்படையினர் அந்நாட்டின் **Mandalayai** பகுதியில் இன்று மீட்புப்பணியில் ஈடுபட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானங்கள் மற்றும் கடற்படை கப்பல்கள் மூலம், இதுவரை மியான்மருக்கு 137 டன் எடையுள்ள நிவாரணப்பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

ராணுவமும், 118 பேர் அடங்கிய மருத்துவக்குழுவை அனுப்பிவைத்திருப்பதுடன், அவசர சிகிச்சைக்காக 60 படுக்கை வசதிகொண்ட தற்காலிக மருத்துவ மையம் ஒன்றையும் அமைத்து வருவதாக ராணுவ செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

எகிப்து மற்றும் கத்தார் நாடுகள் தெரிவித்துள்ள புதிய போர் நிறுத்த ஆலோசனையை ஏற்றுக்கொள்வதாக ஹமாஸ் அமைப்பு தெரிவித்துள்ளது.

காஸா பகுதியில் இஸ்ரேல் படையினருக்கும், ஹமாஸ் அமைப்பினருக்கு இடையே நடைபெற்றுவரும் மோதலை முடிவுக்குகொண்டுவர அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் முயற்சி மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில், தொலைக்காட்சியில் உரையாற்றிய ஹமாஸ் அமைப்பின் தலைவர் திரு **Khalil Al – Hayya,** இந்த போர் நிறுத்த திட்டம் இரண்டு நாட்களுக்கு முன் தங்களுக்கு கிடைக்கப்பெற்றதாகவும், ஆக்கப்பூர்வமான இந்த யோசனையை இஸ்ரேலும் ஏற்றுக்கொள்ளும் என நம்புவதாக தெரிவித்தார்.

இதன்படி, ஹமாஸ் அமைப்பினர் வாரத்திற்கு ஐந்து இஸ்ரேலிய பிணைக்கைதிகளை விடுவிக்க ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த அமைதி முயற்சியின் விவரம் கிடைக்கப்பெற்றிருப்பதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகுவின் அலுவலகமும் உறுதி செய்துள்ளது.

**<<<<<<>>>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 36 ரன் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றிபெற்றது.

அகமதாபாதில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய குஜராத் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 8 விக்கெட் இழப்பிற்கு 196 ரன் எடுத்தது.

197 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய மும்பை அணி, 6 விக்கெட் இழப்பிற்கு 160 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி – ஹைதராபாத் அணியையும், ராஜஸ்தான் - சென்னை அணியையும் எதிர்கொள்கின்றன.

**<<<<<<>>>>>>**

சென்னையில் நடைபெற்றுவரும் சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் மனவ் தாக்கர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 5-11, 12-10, 3-11, 11-6, 11-1 என்ற செட் கணக்கில் தென்கொரியாவின் **Jonghoon Lim**-ஐ வென்றார்.

**<<<<<<>>>>>>**

ஸ்பெயின் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அனிருத் சந்திரசேகர் - ஸ்பெயினின் **David Vega Hernandez** இணை பட்டம் வென்றது.

ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதியாட்டத்தில் இந்த இணை, 6-4, 6-4 என்ற செட் கணக்கில் பிரான்சின் **Gregoire Jacq -** பிரேசிலின் **Orlando Luz** இணையை வென்றது.

**<<<<<<>>>>>>**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் நேற்று நடைபெற்ற மும்பை அணிக்கு எதிரான ஆட்டத்தில் 5-0 என்ற கோல் கணக்கில் பெங்களூரு அணி வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

**<<<<<<>>>>>>**

இந்தியா லெஜன்ட்ஸ் - பிரேசில் லெஜன்ட்ஸ் அணிகளுக்கு இடையேயான கால்பந்து காட்சிப் போட்டி சென்னையில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி நேரு விளையாட்டு அரங்கில் இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

**<<<<<<END>>>>>>**